பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

26 07 2024 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கார்கில் வெற்றி தினத்தையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி கார்கில் போர் நினைவிடத்தில் இன்று மரியாதை செலுத்துகிறார்.

2. தமிழகத்தில் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு மத்திய அரசு உரிய நிதி ஒதுக்கியுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ரயில்வே திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகளில் எவ்வித காலதாமதமும் கிடையாது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தேசிய கைத்தறி விருதுக்கு திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர் திரு. பாலகிருஷ்ணன் தேர்வாகியுள்ளார்.

5. ஒலிம்பிக் வில்வித்தை ஆடவர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

கார்கில் வெற்றி தினத்தையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி கார்கில் போர் நினைவிடத்தில் இன்று மரியாதை செலுத்துகிறார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், ஒவ்வொரு இந்தியருக்கும் இன்றைய நாள் சிறப்பு மிக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் இந்நாளில் மரியாதை செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

கார்கில் செல்லும் தாம் இன்று 4 புள்ளி ஒரு கிலோ மீட்டர் தொலைவிலான **Shinkun La** சுரங்கப்பாதை திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ரயில்வே திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகளில் எவ்வித காலதாமதமும் கிடையாது என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ரயில்வே திட்டங்களுக்குத் தேவையான நிலங்களை கையகப்படுத்துவதில் தமிழக அரசு காலதாமதம் செய்து வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்ததாக சில

நாளிதழ்களில் செய்தி வெளியானது தொடர்பாக அவர் இதற்கு பதிலளித்துள்ளார்.

ரயில்வே திட்டங்களுக்காக இரண்டாயிரத்து 443 ஹெக்டேர் நிலங்களை கையகப்படுத்த தமிழக அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எனவே ரயில்வே திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளில் மாநில அரசு தனி கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் அவற்றை நிறைவு செய்யும் வகையில் விரைந்து செயலாற்றி வருவதாகவும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு மத்திய அரசு உரிய நிதி ஒதுக்கியுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்தும் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் தமிழகத்தில் மாமல்லபுரம், நீலகிரி, தஞ்சாவூர் ஆகிய பகுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் இதுவரை 85 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த வீட்டுவசதித்துறை இணையமைச்சர் திரு. **Tokhan Sahu**, 118 லட்சம் வீடுகளை கட்டிக்கொடுப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இவற்றில் 114 லட்சம் வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதற்கான நிதியை மாநில அரசுகளுக்கு 3 தவணைகளாக மத்திய அரசு விடுவித்து வருவதாகவும் திரு. **Tokhan Sahu** கூறினார்.

<<<<>>>>

இளநிலை மருத்துவ படிப்புக்கான நீட் வினாத்தாள் முறைகேடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் புலனாய்வு விசாரணை குறித்து

தவறான தகவல்கள் பரப்புவதை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்று சிபிஐ அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து சிபிஐ வெளியிட்டுள்ள அறிக்கையில், இவ்வழக்கு தொடர்பாக 33 இடங்களில் இதுவரை சோதனை நடத்தப்பட்டு 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

இதுகுறித்த விசாரணையின்போது பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் சிபிஐ தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கர்நாடக மாநிலம் வடகன்ன மாவட்டத்தில் சிரூரு பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசின் சார்பில் தலா 3 லட்சம் ரூபாய் நிவாரண தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த லாரி ஓட்டுநர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோவிலில் பள்ளி வாகனத்தை இயக்கியபோது உயர்நீத்த தனியார் பள்ளி வாகன ஓட்டுநர் திரு. சேமலையப்பன் குடும்பத்தினருக்கு மாநில அரசின் சார்பில் 5 லட்சம் ரூபாய் நிவாரண உதவி அறிவிக்கப்பட்டுள்ளது.

தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருந்த நிலையிலும், தன் பொறுப்பில் இருந்த பள்ளிக் குழந்தைகளின் விலைமதிப்பில்லா உயிர்களைக் காப்பாற்றி பின் உயிர்நீத்த சேமலையப்பனின் கடமை உணர்ச்சியையும், தியாக உள்ளத்தையும் தாம் தலைவணங்கி போற்றுவதாக முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

கனமழை காரணமாக கர்நாடகாவின் கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து காவிரி ஆற்றுக்கு உபரிநீர் திறந்துவிடப்படுகிறது.

இந்நிலையில் இன்று காலை 6 மணி நிலவரப்படி ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு நீர்வரத்து சுமார் 62 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபானி – 42 நொடிகள்)

காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பால் மேட்டூர் அணையின் நீர்மட்டமும் அதிகரித்து வருகிறது.

<<<<>>>>

தேசிய கைத்தறி விருதுக்கு திண்டுக்கல் மாவட்டம் நல்லாம்பட்டியைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர் திரு. பாலகிருஷ்ணன் தேர்வாகியுள்ளார்.

பருத்தி ரக சேலை உற்பத்தி செய்ததற்காக அவர் இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

புதுதில்லியில் அடுத்த மாதம் நடைபெற உள்ள தேசிய கைத்தறி தினவிழாவில் அவருக்கு இவ்விருது வழங்கப்பட உள்ளது.

<<<<>>>>

தோல் மற்றும் காலணி வர்த்தகத்தை அடுத்த 6 ஆண்டுகளுக்குள் 50 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தோல் மற்றும் காலணி தொழில் துறையினர் உடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார்.

தோல் மற்றும் காலணி துறைக்கான தரக் கட்டுப்பாட்டு ஆணைகளை அடுத்த மாதம் முதல் அமல்படுத்துவது, இத்துறையில் உள்ள சிக்கல்கள் உள்ளிட்டவை தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டன.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், சீன வெளியுறவு அமைச்சர் திரு. **Wang Yi**-ஐ நேற்று லாவோசில் சந்தித்து இருதரப்பு உறவு குறித்து விவாதித்தார்.

-------------

மத்திய அரசின் கல்வி உதவித் தொகையுடன் இந்தியாவில் ஹிந்தி மொழியை கற்றுக்கொள்ள 36 இலங்கை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

-------------

ஜார்கண்ட் மாநிலத்தில் ஜார்க்கண்ட் முக்திமோர்ச்சா சட்டப்பேரவை உறுப்பினர் திரு. **Lobin Hembrom,** பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. **JP Patel** ஆகியோர் கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ் உறுப்பினர் பதவியை இழந்துள்ளனர்.

-------------

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் அமைக்கப்பட்டுள்ள புறவழிச் சாலையை மாநில அமைச்சர் திரு. காந்தி, மக்கள் பயன்பாட்டுக்கு நேற்று திறந்து வைத்தார்.

-------------

அரியலூரில் இருந்து சென்னை, மதுரை, கோயம்புத்தூர் உள்ளிட்ட 7 இடங்களுக்கு பேருந்து சேவையை மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

-------------

நெல்லை மாநகராட்சி மேயர் தேர்தல் அடுத்த மாதம் 5ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

தென்காசி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் வீடுகட்டுவதற்கான கடன் பெறும் முகாம் ஆட்சியர் திரு. கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விபத்து நடைபெறும் இடங்களில் அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் கூறியுள்ளார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட இரண்டாம் கட்ட முகாமில் 944 மனுக்கள் பெறப்பட்டன.

-------------

நாமக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற உள்ளது.

-------------

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா இன்று இரவு 11 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக வில்வித்தை தரவரிசை சுற்றுப் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

இதில் ஆடவர் பிரிவில் இந்தியாவின் **Dhiraj Bommadevara, Tarundeep Rai, Praveen Jadhav** ஆகியோரைக் கொண்ட அணி 2013

புள்ளிகளுடன் 3வது இடத்தைப் பிடித்தது. இதன்மூலம் ஆடவர் குழு காலிறுதிக்கு முன்னேறியது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் தீரஜ் பொம்மதேவரா 4வது இடத்தையும், தருன்தீப் ராய் 14வது இடத்தைபுயம், பிரவீன் ஜாதவ் 39வது இடத்தையும் பிடித்தனர்.

மகளிர் குழுப் பிரிவிலும் இந்தியா ஏற்கனவே காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---------------

ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

தம்புல்லாவில் பிற்பகல் 2 மணிக்கு தொடங்கும் முதல் போட்டியில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இரவு 7 மணிக்கு தொடங்கவுள்ள மற்றொரு ஆட்டத்தில் இலங்கை – பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திண்டுக்கல் அணி இன்று மதுரை அணியை எதிர்கொள்கிறது.

திண்டுக்கல்லில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.15க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**